**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

(~~Under Section 154 Cr.P.C.~~)
(~~கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்~~)
**Under Section 173 BNSS**

8075288 C 1/7/24

1. District மாவட்டம் : புதுக்கோட்டை PS: காவல்நிலையம் ஊழல் Year: ஆண்டு FIR No.: மு.த.அ. எண் 2/2024 Date: நாள் 02.07.2024

2. (i) Act சட்டம்: தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7(a)
   (iii) Act சட்டம்: ஊழல் தடுப்புச் சட்டம் 1988 திருத்தப்பட்டது 2018 Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் இரண்டு மாதங்களுக்கு முன் Date from : நாள் முதல் Date to : நாள் வரை
   Time Period நேர அளவு 26.06.2024 01.07.2024 Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.07.2024 Time : நேரம் 01.30 hrs. மாலை 06.45 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக (கணினி)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 50 கி.மீ தெற்கு
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி மண்டல மின் வாரிய அலுவலகம். நாகை.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் -

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. நாராயணசாமி (b) Father's/ ~~Husband~~'s Name : தந்தை / கணவர் பெயர் ராமையா
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் -
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் மேலாளர் கல் கம்பெனி, (g) Address : முகவரி எண் .61, ECR சாலை, மேலஸ்தானம், மணமேல்குடி (TK) புதுக்கோட்டை மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. மகேந்திரவண்ணன், உதவி மண்டல பொறியாளர், மின்சார வாரியம், உதவி மண்டல பொறியாளர் அலுவலகம், நாகை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   வாதியின் உண்மைத் தன்மை மற்றும் எதிரியின் நடத்தைகள் குறித்து ரகசிய விசாரணை செய்யப்பட்டதால்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

2.7.2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு R. [illegible]

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
02.07.2024

Name: பெயர் J. Jawahar,
Rank: நிலை ......................No. எண் .........
Inspector of police,
VAPC, Pudukottai.

## Attachment to Column 12 of First Information Report in Pudukkottai V&AC Cr.No.02/2024

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் 01.07.2024–ஆம் தேதி மாலை 06.45 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது R.நாராயணசாமி, த/பெ ராமையா, எண்.61, ECR சாலை. மேலஸ்தானம், மணமேல்குடி தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம் என்பவர் புதுக்கோட்டை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து கம்யூட்டரில் டைப்செய்த ஒரு புகார் மனு கொடுத்தார். அந்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:– அனுப்புநர்– R.நாராயணசாமி, த/பெ ராமையா, எண்.61, ECR சாலை. மேலஸ்தானம், மணமேல்குடி தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம், பெறுநர்– காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, புதுக்கோட்டை, அய்யா, நான் மேலஸ்தானத்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் திரு.நீலகண்டன் என்பவர் மணமேல்குடியில் சொந்தமாக நடத்திவரும் ஸ்ரீ அம்மன் ஐஸ் பிளான்ட் மற்றும் பாரத் கேஸ் ஏஜென்சி ஆகியவற்றிக்கு கடந்த 14 வருடங்களாக மேனேஜராக வேலை பார்த்து வருகிறேன். எனக்கு மாதச் சம்பளமாக ரூ.25,000/– கொடுக்கிறார். நானும் எனது முதலாளியும் போலியோவால் பாதிக்கப்பட்டு மாற்றுத்திறனாளியாக உள்ளோம். நான் மேற்கண்ட இரு நிறுவனங்களில் நிர்வாக பொறுப்புகளை கவனித்து வருகிறேன். எங்கள் ஐஸ் பிளான்ட் நிறுவனத்திற்கு கரண்ட் பில் மிக அதிகமாக வருவதால் சோலார் பவர் பிளான்ட் போட எனது முதலாளி முடிவு செய்தார். அதன்பிறகு கடந்த 30.08.2023–ஆம் தேதி 99 கிலோவாட் மின்சாரம் தயாரிக்க திருச்சியில் உள்ள CR Engineering and advent technologies Enterprise என்ற நிறுவனத்திற்கு பர்சேஸ் ஆர்டர் கொடுத்தோம். அதனை தொடர்ந்து கடந்த 2023–ஆம் வருடம் டிசம்பர் மாதத்தில் CR Engineering and advent technologies Enterprise என்ற நிறுவனம் 96 கிலோ வாட் அளவிற்கு மின்சாரம் தயாரிக்க தேவையான டாடா பவர் சோலார் பேனல்களை சுமார் 100 சதுர அடியில் நிறுவினார்கள். மேற்கண்ட சோலார் சிஸ்டத்திற்கு புதிய மீட்டர் பாக்ஸ் பொறுத்துவதற்காக கடந்த 24.01.2024–ஆம் தேதி எனது முதலாளியின் பெயரில் CR Engineering and advent technologies Enterprise என்ற நிறுவனத்தால் மின்சார வாரிய இணையதளத்தில் விண்ணபிக்கப்பட்டது. அதன்பிறகு இணையதளம் மூலம் கடந்த 29.01.2024–ம் தேதி மேற்கண்ட புதிய மீட்டர் பாக்ஸ் பொறுத்துவதற்காக ரூ.16,065.999 செலுத்த வேண்டும் என்ற ஒப்புகை சீட்டை மின்வாரிய இணையதளத்தில் எடுத்தேன்.

அதனைத்தொடர்ந்து ரூ.16.066/—ஐ மின்வாரியத்தின் இணையதள போர்டல் மூலம் செலுத்தினேன். அதன்பிறகு சுமார் 1 மாதம் வரை புதிய மீட்டர் பாக்ஸ் பொறுத்துவார்கள் என்று காத்திருந்தேன். ஆனால் நாகுடி மின்சார வாரியத்திலிருந்து மீட்டர் பாக்ஸ் பொறுத்துவதற்கான அனுமதி தரவில்லை. நான் போலியோவால் பாதிக்கப்பட்ட மாற்றுதிறனாளியான நிலையிலும் ஒவ்வொறு மாதமும் சராசரியாக நாகுடிக்கு சென்று மின்சார வாரிய உதவி மண்டல பொறியாளர் திரு.பிருந்தாவணன் அவர்களை சந்தித்தேன். ஆனால் அவர் புதிய மீட்டர் பாக்ஸ் பொறுத்துவதற்கு அனுமதி கொடுக்கவில்லை. கடந்த 2 மாதங்களுக்கு முன்பு நான் திரு.பிருந்தாவணன் அவர்களை புதிய மீட்டர் பாக்ஸ் பொறுத்துவது சம்மந்தமாக சந்தித்த போது அவர் ரூ.5,00,000/— லஞ்சமாக கொடுத்தால் தான் புதிய மீட்டர் பாக்ஸ் பொறுத்துவதற்கு அனுமதி தருவேன் என்று கூறினார். நான் என்னுடைய முதலாளியிடம் கேட்டு சொல்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். அதன்பிறகு நான் 26.06.2024—ஆம் தேதி மதியம் சுமார் 1 மணிக்கு நாகுடி மின்சார வாரிய மண்டல அலுவலகத்தில் திரு.பிருந்தாவணன் அவர்களை சந்தித்து புதிய மீட்டர் பாக்ஸ் பொறுத்துவதற்கான அனுமதி கொடுக்கும்படி கேட்டேன். ஏற்கனவே அவர் கேட்ட பணம் ரூ.5,00,000/— கொடுத்தால் தான் புதிய மீட்டர் பாக்ஸ் பொறுத்துவதற்கான அனுமதி தருவேன் என்று கூறினார். அதற்கு நான் என்னுடைய முதலாளி நீலகண்டன் அவ்வளவு பணம் கொடுக்க இயலாது என்றும், தொகை அதிகமாக உள்ளது என்று என்னிடம் கூறினார் என்று திரு.பிருந்தாவணனிடம் சொன்னேன். அதற்கு அவர் தொகையை குறைத்து கொண்டு ரூ.2,00,000/— கொடுங்கள் என்று சொன்னார். அதற்கு நான் என்னுடைய முதலாளி சிரமப்பட்டு கொண்டு இருப்பதாக சொன்னேன். அதனால் திரு.பிருந்தாவணன் ரூ.25,000/—ஐ குறைத்து கொண்டு ரூ.1,75,000/—ஐ கண்டிப்பாக கொடுக்க வேண்டும் என்று சொன்னார். நான் முதலாளியிடம் பேசிவிட்டு இரண்டொரு நாளில் வந்து தங்களை பார்ப்பதாக திரு.பிருந்தாவணனிடம் சொல்லிவிட்டு வந்தேன். அதன்பிறகு இன்று 01.07.2024ம் தேதி மதியம் சுமார் 1.30 மணிக்கு நாகுடி மண்டல மின்வாரிய அலுவலகத்தில் திரு.பிருந்தாவணன் அவர்களை சந்தித்தேன். அப்போது அவர் என்னிடம் உங்க முதலாளி பணம் கொடுத்து அனுப்பினாரா என்று கேட்டார், அதற்கு நான் அவரால் உடனே ரூ.1,75,000/— ஏற்பாடு செய்ய முடியவில்லை, அதான் உங்களை பார்க்க சொன்னார் என்று சொன்னேன். அதற்கு அவர் நாளைக்கு ரூ.1,00,000/— முன்பணமாக கொடுங்கள், நான் வேலையை முடித்த பிறகு மீதித்தொகையை வாங்கி கொள்கிறேன் என்று சொன்னார். அதற்கு நான் சரிங்க சார் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். எனக்கும், எனது முதலாளிக்கும் லஞ்சமாக பணம் கொடுத்து

புதிய மீட்டர் பாக்ஸ் பொறுத்துவதற்கு விருப்பம் இல்லை. எனவே இன்று 01.07.2024ம் தேதி மாலை 06.45 மணிக்கு புதுக்கோட்டை லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகத்திற்கு வந்து, என்னிடம் புதிய மீட்டர் பாக்ஸ் பொறுத்துவதற்கு லஞ்சமாக ரூ.1,75,000/– கேட்டு, முன்பணமாக ரூ.1,00,000/–யை 02.07.2024ம் தேதி கொண்டு வந்து கொடுக்கும்படி சொன்ன நாகுடி மின்சார வாரிய உதவி மண்டல பொறியாளர் திரு.பிருந்தாவணன் என்பவர் மீது கணினி மூலம் தயார் செய்த புகார் மனு கொடுத்து நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்) /R.நாராயணசாமி, 01.07.2024.

Sir, Received the above computer typed complaint on 01.07.2024 at 06.45 pm. The genuineness of the complaint was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Hence, I registered a case in Pudukkottai Vigilance and Anti-Corruption Cr.No.02/2024 u/s 7 (a) of Prevention of Corruption Amendment Act-2018 at 06.00 am today on 02.07.2024 and took up for investigation. (Sd-) J.Jawahar, Inspector of Police, /V&AC/PK.

Original FIR along with Original Computer type complaint of Tr.R.Narayanasamy, S/o Ramaiah, No.61, ECR Road, Melasthanam, Manamelkudi Taluk, Pudukkottai District is submitted to the Hon'ble Chief Judicial Magistrate/Special Judge for trial of case under Prevention of Corruption Act, Pudukkottai and a copy of FIR is submitted to the Director Vigilance and Anti-Corruption, Chennai.

2.7.2024

(J. Jawahar)

Inspector of Police,

V&AC, Pudukkottai.